# செய்திக் குறிப்பு

***நம் பள்ளி நம் பெருமை* - பள்ளி மேலாண்மைக் குழு குறித்த விழிப்புணர்வுக் கூட்டங்கள்: அரசுப் பள்ளிகளில் 23 லட்சம் பெற்றோர்கள் பங்கேற்பு**

அரசுப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் முக்கியத்துவத்தைப் பெற்றோர்களுக்கு விளக்கும் வகையில் 37,558 பள்ளிகளில் ஞாயிற்றுக்கிழமை (20.3.2022) நடைபெற்ற கூட்டத்தில் 23,54,009 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் ஒரு சேர பள்ளிகளுக்கு வருவது தமிழ்நாட்டு வரலாற்றில் இதுதான் முதல் முறை.

திருச்சியில் பீமா நகரில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற பெற்றோர்களிடையே உரையாற்றினார். மாவட்ட ஆட்சியரும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

ஒவ்வொரு அரசுப் பள்ளியையும் தன்னிறைவு பெற்ற பள்ளியாக மாற்றும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே அரசுப் பள்ளிகளில் அமைக்கப்படும் பள்ளி மேலாண்மைக் குழுக்களின் முக்கிய நோக்கம். பள்ளி மேலாண்மைக் குழுவின் செயல்பாடுகள் குறித்து பெற்றோர்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டுவதற்கான இந்த நிகழ்ச்சி அரசுப் பள்ளிகளில் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் 1 மணி வரை நடைபெற்றது.

முன்னெப்போதுமில்லாத வகையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாநிலம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள் 53,15,114 பேரை தன் குரல் பதிவு மூலம் அலைபேசியில் அழைத்திருந்தார். 3 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், 1.8 லட்சம் 'இல்லம் தேடிக் கல்வி' தன்னார்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் மாவட்ட ஆட்சியர் உள்பட அரசு அதிகாரிகளும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பள்ளி மேலாண்மைக் குழுவின் செயல்பாடுகள் குறித்தும் பெற்றோர்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தின் பங்கேற்பு குறித்தும் கூட்டத்தில் விளக்கப்பட்டது.

பெற்றோர்களுக்காக அரசுப் பள்ளிகளில் நடந்த இந்தக் கூட்டங்கள் *'நம் பள்ளி நம் பெருமை'* பரப்புரையில் ஒரு மைல்கல். இந்தப் பரப்புரை மார்ச் 8ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பெற்றோர்களுக்கு விடுத்த அழைப்போடு தொடங்கியது. அன்றைய தினமே, பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை பள்ளி மேலாண்மைக் குழு செயல்படுத்துவதற்கு உதவும் வகையில் புதிய செயலியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் வெளியிட்டார். பள்ளி மேலாண்மைக் குழுவின் முக்கியத்துவத்தை மக்களுக்கு விளக்கும் வகையில் பரப்புரைப் பாடல் வெளியிடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் கலைப் பயணங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி மேலாண்மைக் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்பட்டு, புதிய பள்ளி மேலாண்மைக் குழு விரைவில் செயல்படத் தொடங்கும். இதன்மூலம் மாணவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் நோக்கமாகும்.

-ஆணையர், பள்ளிக் கல்வி

# <u>Press Release</u>

## Nam Palli Nam Perumai - Awareness Parent Meeting on School Management Committee: 23 lakh Government School Parents participate

Tamil Nadu's vision for quality education will now be co-created with the parents and larger community of the State.

For the first time in the history of the State, 53,15,114 parents were invited to the 37,558 govt schools of the State as the first step to setting a new agenda in education reform in the State.

23,16,707 parents across the State participated in the event which began at 10 am till 1 pm. Parents had come in large numbers to their child's school to show they care and to join not only their hands but their hearts to see how they could make the schools a better place for their children. In another first for the country and the State, a voice blast carrying the Honourable Education Minister's message was sent out to all the 53,15,114 parents welcoming them to attend the event to be held in the school on March 20th.

Hundreds of govt. officials including the respective District Collectors across the State visited the schools to participate in this event along with the parents. Honourable Education Minister, also participated in the meeting along with the Collector in Corporation Middle School, Bheema Nagar, Tiruchirapalli.

More than 3 lakh teachers, 1.8 lakh volunteers of Illam Thedi Kalvi (ITK), several civil society organisations participated in this event across the State.

Nam Palli Nam Perumai – Our School, Our Pride is a flagship initiative of the School Education Department to make all the schools in Tamil Nadu, the pride of the State, by making it qualitative, equitable and accountable.

The initiative was launched on the 8th of March with the message from the Chief Minister of the State inviting parents to come and engage with the schools to make it the best of place that a child can be. The School Development App that the School Management Committees (SMCs) will use to strengthen the entire planning & development process on a real -time basis, was also released on the same day by the Education Minister.

The SMCs in Tamil Nadu are being envisaged as a key stakeholder group that will not only represent the voice of the people but also consolidate and drive this vision of education.

Today's meeting was the beginning to transition the schools from ***where it is*** to ***where it needs to be***.

This entire initiative is being supported by a media and an on-ground campaign with cultural teams and video on wheels going across all the 38 districts in the State. Several institutions, public figures and celebrities are joining hands to make this campaign reach the remotest corner of the State.

-Commissioner, School Education